**திக்வெல்ல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 நவம்பர் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து திக்வெல்ல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெற வேண்டிய ரூபா 583,472 இற்கான தொகை கணக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 1,022,982 தொகைக்கான மூலதன உதவி, மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 1,379,276 இற்கான நிலுவை சம்பள மீளளிப்பு, மீளாய்வாண்டிற்கான வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 5,086,387 தொகை மற்றும் வருடாந்த வட்டி செலவு ரூபா 971,125 தொகை குறைவாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 4,746,628 இற்கான நிர்மாண வேலை மற்றும் எக்ஸ்கெவேடர் இயந்திரத்திற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 691,000 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 1,089,027 தொகை மற்றும் பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 97,723 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 12,008,640 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(எ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,300,069 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செயற்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஒவ்வொன்றும் சமப்பட வேண்டிய நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவிற்கான அரசிறை உதவுத் தொகை மீதிகளிடையே ரூபா 758,376 இற்கான ஒப்பற்ற தன்மை ஒன்று காணப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு/ அட்டவணையின் பிரகாரம் காட்டப்பட்ட மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 222,472,250 இற்கான ஒப்பற்ற தன்மைகள் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 41,173,456 தொகையான பலவின கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 16,939,388 இற்கான மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 125,166,400 தொகையான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 94,962,950 இற்கான மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஒரே தடவையில் செலுத்தும் வைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு பிணை வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,182,304 தொகையாகக் காணப்பட்டதுடன், அம் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2,075,304 இற்கான மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 98,822,776 தொகைக்கான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உறுத்துறுதி மற்றும் நாளது வரை மற்றும் முறைசார் விதமாக பேணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடு, கூட்டுத்தொகை ரூபா 166,339,858 தொகைக்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரை பேணப்பட்ட கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் பதிவேடு, ரூபா 3,967,460 தொகைக்கான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரை பேணப்பட்ட சேர்வுப் பதிவேடு மற்றும் ரூபா 155,250,788 தொகைக்கான நிலுவை ஏனைய வருமானங்கள் தொடர்பான வருமானப் பதிவேடு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) பிரிவின் பிரகாரம் வழங்கிய நாள் முதல் 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 594,346 இற்கான 09 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,068,210 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,227,667 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 840,543 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 74 சதவீதத்தை மிகைத்துள்ள மொத்த மீண்டுவரும் செலவு காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் சுயமாக உருவாக்கி வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டினைப் போலவே கடந்த இரண்டு ஆண்டுகளின் போது கணிசமான உயர்ந்த பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுகள் மிகைத்திருந்ததுடன், வருமான உதவி கிடைக்காவிடின் சுயமாக உருவாக்கிய வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்கு எவ்விதத்திலும் இயலாத நிலைமை ஒன்றினைக் காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் 1:1.7 தொகை எனினும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள தீர்க்கப்படாமல் காணப்படும் முறையே ரூபா 16,939,388 தொகை மற்றும் ரூபா 84,962,950 தொகையான மீதிகள் காணப்பட்டமையால் அவ் விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத் தன்மையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வீதவரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 2,599,147 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 3,481,698 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 6,080,845 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,795,314 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,285,531 தொகை அளவான உயர்ந்த நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

#### 2.4.2 வாடகை

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,783,182 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,584,913 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 4,368,095 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,671,314 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,696,781 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.3 ஏனைய வருமானங்கள்**

பிரதேச சபைச் சட்டத்தின் 149 பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்களில் இருந்து வருடாந்தம் 01 சதவீதம் வரை வரி அறவிட முடியுமெனினும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 07 பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து முறைப்படி கணக்கிடப்பட்ட வருமான அறிக்கையின் பிரகாரம் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. 03 ஹோட்டல்களில் இருந்து மாத்திரம் சபை இழந்துள்ள வருமானம் ரூபா 1,535,860 ஆகும்.

**2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,268,890 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 45,360,160 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 மூலதன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம்**

பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு மூலதனச் செலவுகள் ரூபா 33,550,000 தொகையாகக் காணப்பட்டதுடன், உள்ளவாறான மூலதனச் செலவுகள் ரூபா 42,287,093 தொகையாகக் காணப்பட்டது. பொது நிருவாக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்த மூலதனச் செலவுகள் மதிப்பீட்டு செலவில் 60 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீதியான 03 நிகழ்ச்சித் திட்டங்களில் செயலாற்றுகை 0.1 சதவீதம் முதல் 28.9 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

**3.2.1 மனித வள முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது மூன்றாம் தர, இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 16 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சேர்க்கப்பட்டிருந்த 12 பிரதியீட்டு ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள், ஊழியர் சேமலாப நிதியின் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சபையின் பங்களிப்புக்காக 2016 ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 3,162,778 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**3.2.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 2,425,000 கிரயத்தையுடைய 2 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத வேறு ஒரு வாகனம் 2014 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டதுடன், நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த பாதை செப்பனிடும் உருளை

மீளாய்வாண்டின் போது சுமார் 3.5 இயந்திர மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான 05 காணிகள் எதுவித பயன்தரும் விடயங்களுக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பைகளை சேகரிப்பதற்காக 2012 ஆண்டு முதல் 2016 அண்டு வரை ரூபா 929,633 இற்கான தொகையொன்று தரகுப் பணம் என சபையின் சுகாதார ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்காத, தகனசாலை தொடர்பான வழக்கினை இணக்கத்திற்கு கொண்டு வராமல் தொடர்ந்தும் நடாத்தப்படுவதினால் 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை அவ் வழக்கிற்காக ரூபா 427,500 சட்டத்தரணிக் கட்டணம் செலுத்த நேரிட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் பல்வேறு நிதியேற்பாடுகளின் கீழ் ரூபா 26,500,000 இற்கான 44 வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 4,500,000 தொகைக்கான 03 நிர்மாண வேலைகள் மாத்திரமே செயற்படுத்தியிருந்தது.

(ஆ) சபையினால் பாதீட்டின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டிருக்காத ரூபா 4,650,855 தொகைக்கான 08 நிர்மாண வேலைகள் சபை நிதியத்தில் இருந்து செய்யப்பட்டிருந்ததுடன் அந்த 08 நிர்மாண வேலைகளின் செலவு ரூபா 5,167,617 தொகையாகியிருந்தது.

### 3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சம்பளங்கள் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகனம் பழுதுபார்த்தலுக்காக ரூபா 5,780,572 இற்கான செலவு செய்யப்பட்டிருந்ததுடன் குப்பைகளை சேகரிப்பதன் மூலம் ரூபா 1,590,050 இற்கான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,010,712 செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த உயிர்வாயு அலகில் இருந்து வருமானம் எதுவும் உழைத்திருக்கவில்லை. அத்துடன் பரிசோதனை சந்தர்ப்பத்தில் அது செயற்படாமல் காணப்பட்டது. அதன் காரணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு பயனற்றதாகியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 4 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,760,394 தொகைக்கான சேமிப்புகளும் மேலும் 04 செலவு விடயங்களில் ரூபா 3,697,826 தொகைக்கான பிரதிகூலமான முரண்களும், வருமான விடயம் ஒன்றில் நெருங்க இருக்காத இலக்குகளின் பெறுமதி ரூபா 596,923 தொகை காணப்படாமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 448,176 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு